பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 25 வெள்ளிக்கிழமை (09.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 104

# பஸிலும் நானும் கிளிநொச்சியில் புலிகளுடன் பேசினோம்; அவர்கள் பல நிபந்தனைகளை விதித்ததால் திரும்பிவிட்டோம்

## நாடாளுமன்றில் நேற்று சூரியாராய்ச்சி தகவல்


சிறிபதி


பஸில்

கொழும்பு, மார்ச் 9

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான பஸில் ராஜபக்ஷவும் தானும் கிளிநொச்சிக்குச் சென்று, இரகசிய ஒப்பந்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசியதாக நாடாளுமன்றத்தில் சிறிபதி சூரியாராய்ச்சி நேற்று பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இந்த உள்வீட்டு இரகசியங்களை அந்தக் கட்சியின் எம்.பியும், சமீபத்தில் ஜனாதிபதியினால் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர்களில் ஒருவருமான சிறிபதி சூரியாராய்ச்சி நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியமையையடுத்து நேற்று சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

நானும் பஸில் ராஜபக்ஷவும் அவர்களுடன் (புலிகளுடன்) பேசியபோது ஏற்க முடியாத நிபந்தனைகளை அவர்கள் விதித்தனர். இதனால் நாம் பேச்சிலிருந்து திரும்பிவிட்டோம். - என்று கூறினார் எம்.பி.

தமது பாதுகாப்பு விலக்கப்பட்டதால் தமக்கு ஏற்பட்டுள்ள உயிர் ஆபத்துப் பற்றியும் ஆவேசமாகப் பேசி, அரச தரப்பைச் சாடினார் அவர்.

நாடாளுமன்றத்திலிருந்து செல்லும் போதே இலக்கத் தகடில்லாத வெள்ளை வானில் விரட்டி வருகின்றனர். எந்த நேரத்திலும் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். இப்படியான ஒரு நிலையில் என்னுடைய பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது. எனக்கு ஏதாவது விபரீதம் ஏற்படுமானால் அதற்கு இந்த அரசும் பொலிஸ் மா அதிபருமே பதில் சொல்ல வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

**வெள்ளை வானில் விரட்டுகின்றனர்**

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடியில் நேற்று படைநகர்வு முயற்சி

மட்டக்களப்பு, மார்ச் 9

மட்டக்களப்பு மாவட்டம், செங்கலடி கறுத்தப்பாலம் பகுதியில் படையினர் மேற்கொண்ட படைநகர்வைத் தாம் முறியடித்துள்ளதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை பெரும் படை நகர்வொன்றை படையினர் மேற்கொண்டதாகவும் அதனை முறியடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. மோதலில் கொல்லப்பட்ட ஒரு இராணுவச் சிப்பாயின் சடலத்தை கைப்பற்றியதுடன் ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

(04 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் நேற்றுக் குண்டுவீச்சு

கிளிநொச்சி, மார்ச் 9

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் நேற்றுக்காலை 8.45 மணியளவிலும் மாலை 3.30 மணியளவிலும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

கிபிர் விமானங்கள் தாக்குதலை நடத்தின. எனினும் சேத விவரம் எவையும் தெரியவரவில்லை. (அ-1-வ)

# ஈ-ராக்கை சிதறடித்த அமெரிக்கா இலங்கையில் குறைகாண்பது தவறு

## வீரவன்ஸ ஆவேச உரை

கொழும்பு, மார்ச் 9

ஜனநாயகத்துக்கு விரோதமாக ஈராக் மீது படையெடுத்த அமெரிக்கா அங்கே பல்லாயிரம் இஸ்லாமியர்களைக் கொன்று குவித்து அந்நாட்டை சின்னாபின்னமாக்கியுள்ளது. அமெரிக்காவின் இந்த அட்டூழியங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை நிலைமை எவ்வளவோ மேல் என்பதை அந்நாடு உணரவேண்டும். நாம் ஒருபோதும் இந்த பிரிவினைவாத ஆக்கிரமிப்பாளர்களின் கைப்பொம்மைகளாக மாறிவிடக் கூடாது.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் அமெரிக்காவை கடுமையாகச் சாடி உரையாற்றியிருக்கிறார் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ஸ.

"தேசப்பற்று சட்டம்" என்ற பெயரில் தன் நாட்டு மக்கள் மீதே பல்வேறு அடக்கு முறைகளைப் பலவந்தமாகத் திணித்திருக்கும் அமெரிக்கா, நம் நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளவும் விசாரணைகளை நடத்தவும் முற்படுவது கண்டிக்கத்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கே பத்திரிகை அச்சுத்தாள் எடுத்துச் செல்வதற்குத் தடையா?

## தமக்குத் தெரியவே தெரியாது என்கிறார் ஊடக அமைச்சர்

கொழும்பு, மார்ச் 9

யாழ்.குடாநாட்டில் செய்திப் பத்திரிகைகளுக்கான அச்சிடும்தாள் இல்லையென்பது எனக்குத் தெரியவே தெரியாது. இப்போது நீங்கள் கூறியவுடன் தான் இது விடயம் எனக்குத் தெரியவந்திருக்கிறது. - என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர்மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக்களகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அரசு ஊடகச் சுதந்திரத்தை மதிக்கிறது. ஊடகங்களை அடக்கி ஒடுக்கும் எண்ணம் எமக்கில்லை. இன்று பல தனியார் வானொலிகள் இயங்குகின்றன. தனியார் தொலைக்காட்சி சேவைகள் எவ்வித கெடுபிடியுமின்றி இயங்குகின்றன. நாம் தொடர்ந்தும் பத்திரிகைச் சுதந்திரத்தைப்பேணிப் பாதுகாப்போம் - என்று அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் குறிக்கிட்ட செய்தியாளர் ஒருவர் "யாழ். குடாநாட்டில் பத்திரிகைகள் அச்சிடும் தாள் இல்லை. அவற்றை அங்கு எடுத்துச் செல்ல பாதுகாப்புப் பிரி

(03 ஆம் பக்கம் பார்க்க)

## படுவான்கரை மீதான ஷெல் தாக்குதலில் இருவர் பலி

மட்டக்களப்பு, மார்ச் 9

மட்டக்களப்புப் படைமுகாம்களில் இருந்து படுவான்கரை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தாண்டியடியில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கு இருவர் பலியாகினர் மற்றும் இருவர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை வாழைச்சேனை, சத்துருக்கொண்டான், மயிலம்பாவெளி ஆகிய படை முகாம்களில் இருந்து இலுப்பையடிச்சேனை, ஆயித்தியமலை ஆகிய பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். (ஐ-04)

## அரசியல் கட்சிகள் தமக்கெனத் தனித்தனியே ஆயுதக் குழுக்களை வைத்திருக்க அனுமதியா?

### அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று ஐ.தே.க. நாடாளுமன்றில் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 9

கருணா அணி அங்கீகரிக்கப்பட்ட தனிப் படையா? அல்லது அரசின் துணைப் படையா? புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறும் அரசு கருணா அணியினரை என்னவென்று கூறுகின்றது? கிழக்கு மாகாணத்தை கருணாவிடம் அரசு கையளித்து விட்டதா என்பதை அரசு வெளிப்படையாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் மைக்கல் பெரேரா நாடாளுமன்றத்தில் இப்படிப் பகிரங்கக் கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

கருணா அணியினர் இன்று சீருடையுடன் கொழும்பில் நடமாடுகின்றனர். அலுவலகத்தையும், படை முகாமையும் அமைத்துவிட்டனர். ஆயுதப் பயிற்சிபெற்ற கருணா அணியினரின் இராணுவ அணி வகுப்பை கருணா உத்தியோக பூர்வ சீருடையுடன் சென்று ஏற்றுக்கொள்கின்றார்.

அப்படியானால் கருணா அணியினர் தனியாக படைப்பிரிவு ஒன்றை வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

கருணா அணியினர் அரசியல் நீரோட்டத்தில் கலந்துவிட்டனர் என கருணாவுக்கு வக்காலத்து வாங்கும் அரசாங்கம் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் தனித்தனியாக ஆயுதப் படைகளை வைத்துக் கொள்ள அரசு அனுமதி வழங்குமா? என்றும் ஜோசப் மைக்கல் பெரேரா கேள்வி எழுப்பினார்.

அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தை புதன்கிழமையன்று எதிர்க்கட்சியினரின் சார்பில் ஜோஸப் மைக்கல் பெரேரா ஆரம்பித்துப் பேசும்போதே இந்த விடயங்களை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

**மீளாய்வு செய்யவேண்டிய நிலையில்**

நாட்டில் குற்றச்செயல்களையும், பயங்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# தொப்பிகல நோக்கி பெரும் படை நகர்வு?

கொழும்பு, மார்ச்

கிழக்கில் விடுதலைப் புலிகள் இன்னமும் பலமாக நிலைகொண்டிருக்கின்றனர் எனக் கூறப்படும் தொப்பிகல காட்டுப் பிரதேசம் நோக்கி அரசுப் படைகள் பெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றன என்று வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டது. எனினும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க இதனை மறுத்துள்ளார்.

தொப்பிகல பகுதியில் சிறு சிறு தாக்குதல் நடவடிக்கைகளிலேயே படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் கூறினார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிபதி சூரியாராய்ச்சியின் ஆதரவாளர்கள் மீது சூடு!

கொழும்பு, மார்ச் 9

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபதி சூரியாராய்ச்சியின் ஆதரவாளர்கள் மீது இனந் தெரியாத கும்பல் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

கடவத்தைப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினரின் உருவப்படம் தாங்கிய சுவரொட்டிகளை ஒட்டச் சென்றபோது இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்று கடவத்தைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்

(04 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

நிறுவனங்களுக்கு பொருத்தமான சகல வசதிகளையும் கொண்ட Single Story Complex Building வாடகைக்கு உண்டு.

தொடர்பு: Dr.T.KULASINGAM
7/1, நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## ஒத்துமாறல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு அனுமதி கிடைத்த மாணவன் ஜயவர்த்தனபுர, கொழும்பு பல்கலைக்கழகங்களுக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு : ப.தமிழ்ராஜன்
060 - 2241909

## புளூ றிபன் ஹொட்டல் & ரெஸ்ரோறன்ட்
## Blue Ribbon Hotel & Restaurant

★ புரியாணி (கோழி, ஆடு, மாடு) ★ பிறைட் றைஸ்
★ சீ பூட் ★ கொத்து றொட்டி ★ டெவல்

இன்னும் பல வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ற வகையில் மேலைத்தேய உணவு வகைகளும் மற்றும் தங்குமிட வசதிகள், ஓடர் உணவு வகைகள் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

புளூ றிபன் ஹொட்டல் T.P. : 021 226 3999
(Sea Side) 077 5006999
தும்பளை, பருத்தித்துறை. 077 6529078

(சி/52100)


## 8 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

09.03.2007




**கருணாகரன் - செல்வநாயகி** தம்பதியரின் அருந்தவப் புதல்வி **செல்ஷியா** தனது எட்டாவது பிறந்த தினத்தை இன்று லெபனான் சென்னல்பில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை லெபனானிலுள்ள அப்பா, அம்மா, அத்தை, மாமா, யாழ்ப்பாணத்திலுள்ள அப்பப்பாமார், அப்பம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், லண்டனிலுள்ள குமார் பெரியப்பா குடும்பம், ஜேர்மனியிலுள்ள மகேஸ் அத்தை குடும்பம், யோகா அத்தை குடும்பம், சுசிமச்சாள் குடும்பம், சர்மிலன் மச்சான் குடும்பம், பஹ்ரெனில் உள்ள உதயன் பெரியப்பா குடும்பம், ரவி பெரியப்பா குடும்பம், அழகேஸ் அத்தை, இத்தாலியிலுள்ள சங்கிமாமா, ஜெனோ அண்ணா, வவுனியாவிலுள்ள அப்பம்மா, ஜெகா அத்தை குடும்பம், சித்திரா மச்சாள், சனா மச்சான், சிறி மாமா, இந்தியாவிலுள்ள ராசன் பெரியப்பா குடும்பம் குஞ்சுக்கனி பெரியப்பா குடும்பம் மற்றும் அனைவரும் சிறி வரத விக்ன விநாயகர் அருள்கொண்டு நோய் நொடியின்றி சீரும் சிறப்புடனும் நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.* (58661)

தகவல் :
சின்னத்துரை பூரணம்.

## திருமறைக் கலாமன்றம்
## நாடகப் பயிலகம்
## விண்ணப்பம் கோரல்

எமது மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2007ஆம் ஆண்டுக்கான 14 ஆவது புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடகக்கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும், நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப்பயிற்சிநெறி அமையும்.

பயிலவிரும்புவோர் யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 16.03.2007 இற்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

*238,பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (58678)

பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்.

## தவறிவிட்டது

சுஜிதசாயி கேதீஸ்வரநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (865452756V), விசேட அடையாள அட்டை (0903039626) என்பன தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் 82, குறுக்குத்தெரு, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொ.பே: 021 222 6529 (58686)

## தவறிவிட்டது

ஐயாத்துரை அகிலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 802445032 V கோப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் 05.03.07 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். 79, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். தொ.பே. 0776081437 (58691)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ புலோலி மெ.மி.த.க. பாடசாலை
2006ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற



செல்வன் சண்முகராசா கஜமுகன்
(144 புள்ளிகள்)



செல்வன் உதயகுமார் சதுர்சனன்
(141 புள்ளிகள்)

இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற செல்வி சி.ரம்ஜா, செல்வி கு.சாம்பவி, செல்வி ம.நிரோசினி, செல்வன் த.உமாசுதன், செல்வன் ஜெ.ரஜீவன், செல்வன் ந.நகுலேஸ் ஆகியோரை மேன்மேலும் கல்வியில் சிறப்புப் பெற்று வளர வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள்.

(58663)

## இலக்கிய நூல்களுக்கான
## பரிசுத்திட்டம் - 2006

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட (யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி) ஆகிய 5 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடம் இருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

1) நாவல் 2) சிறுகதை 3) கவிதை
4) நாடகம் 5) சிறுவர் இலக்கியம் 6) பல்துறை
7) இலக்கிய ஆய்வு விமர்சனம்
8) உயர்கல்விக்கான நூல்கள்

**போட்டி விதிகள்**

1) ஓர் எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்.
2) பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு மாகாண சபைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3) நூல்கள் 2006ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
4) ஒவ்வொரு போட்டிக்கும் நான்கு பிரதிகள் வீதம் அனுப்புதல் வேண்டும்.
5) போட்டிகளில் நடுவர்களின் தீர்பே இறுதியானதாகும். நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர்

உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம், திருகோணமலை.
என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

செயலாளர்,
கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.

(சி/52151)


## இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
## பிருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

அரசினர் தகைமை க.பொ.த (உயர்தர) 2 பாடங்களில் சித்தி

பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன

**Company Secretarial Services(Pvt.)Ltd.**

285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

## Computer Courses

- ✧Diploma in Microsoft Office
- ✧Diploma in Desktop Publishing
- ✧Diploma in Computerized Accounting
- ✧Diploma in Computer Programming
- ✧Diploma in Hardware Engineering

அனைத்துக் கற்கைநெறிகளும் 09.03.2007 ஆரம்பம்!
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்!

**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291

## COMPUTER EXPRESS

Institute of Information Technology
Head Office : 15, Sirambiyadi Lane, Off Stanly Rd, Jaffna.
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna.
TP No : 021 222 8250 , 0777 222 422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007

80% OFF

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

50% Off
Advances Courses
Diploma in Video Editing [illegible] 3250
Diploma in Multimedia [illegible] 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I -09/03/2007
Batch II - 10/03/2007
Batch III - 11/03/2007
Batch IV -14/03/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



இகம் 15.09.1934 பரம் 07.02.2007

அமரர்
### மயில்வாகனம் மகாலிங்கசிவம்
(மங்கும்பான்)

தேனிலும் இனிய சிந்தை
தெளிந்த நல்லறிவு மேலாம்
பாலினும் இனிய இன்சொல்
பண்பிலும் உயர்ந்த உள்ளம்
வாழ்வினை வகுக்க வேண்டி
இறைவனின் அருளால்
முதல்வனாய் பெற்றோம் நாம்

எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இன்று (09.03.2007) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இல. 233, கே.கே.எஸ். வீதி,*
*இலங்கை வங்கி அருகில்,*
*சுன்னாகம்.* (58684)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா செல்வராசா



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா நேற்று (08.03.2007) உருத்திரபுரத்தில் காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் உதயகுமார், சந்திரகுமார், ரவிக்குமார், கலாரஞ்சினி, ஜெயக்குமார், விஜயகுமார், செல்வரஞ்சினி, சிவரஞ்சினி ஆகியோரின் தந்தையும் உதயகுமாரி, கோமதி, ஜெயலஷ்சுமி, ஞானசுந்தரம், மலர், மாலா, சற்குணகுமார் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் பரமேஸ்வரி, நல்லம்மா, சண்முகநாதன், ராசம்மா, சிவகுருநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.03.2007) உருத்திரபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் மேற்கு,*
*சண்டிலிப்பாய்.* (58685)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 27 ★ 12 ★ 1962



ஆண்டவன் பாதத்தில் 18 ★ 02 ★ 2006

### அமரர் மாணிக்கம் சிறிதரன்
(சாரதி, தென்மராட்சி சிற்றூர்திச் சங்கம்)

திதி : 09.02.2007

ஆண்டு ஒன்று ஆனதையா ஆறவில்லை என் மனம்
சாகாவரம் பெற்றவர் இவ்வுலகில் உண்டோ ஐயா? நாளும் அழுவதற்கு
வேதனையுடன் சாதனை படைத்திட எழுந்திடுவோம்
நாளும் உம் நினைவுடன் என் பணி தொடர்ந்திடுவேன்.

திருமதி மாலினி சிறிதரன்
(யா/மந்துவில் றோ.க.த.க.வித், கொடிகாமம்).
சி.சர்மிகா, சி.நிவேசிகா, சி.தெளசிகா,
(யா/சாவகச்சேரி, இந்துக் கல்லூரி)

*கேணியடி,*
*மீசாலை மேற்கு,*
*சாவகச்சேரி.* (58600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நகல்: 222 9944

## தமிழர்களுக்குப் புரியாத நீதி!

*'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்லாமல் நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.'* - என்ற ஒரு மகாவாக்கியம் நீதித்துறையில் உள்ளது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை பொதுவாக நீதி நிலைநாட்டப்படுகிறதோ இல்லையோ, நீதி நிலைநாட்டப்படுவதாக அவர்களது மனதில் திருப்தி ஏற்படக் கூடிய விதத்தில் நிகழ்வுகள் இடம்பெறுவதில்லை என்பதே உண்மை.

இலங்கையின் நீதித்துறையையோ அல்லது நீதிமன்றங்களையோ அல்லது அவற்றின் தீர்ப்புகளையோ இழிவுபடுத்தும் விதத்தில் இங்கு விமர்சிப்பதல்ல எமது நோக்கம். விமர்சன விலக்களிப்பு விசேடமாக வழங்கப்பட்டுள்ள நீதித்துறைக்கு எதிராகப் பகிரங்கமாகக் கருத்துக் கூறும் உரிமை ஊடகவியலாளனுக்கு இந்நாட்டில் அதிகம் இல்லை, அது மட்டுப்படுத்தப்பட்டதே என்பதும் எமக்குத் தெரியும். அந்த வரையறைக்குள் நின்றுகொண்டு தான் இவ்விடயத்தை இங்கு ஆராய வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆனாலும், தீர்ப்புகளையும், நீதிமன்றங்களையும் விமர்சிக்காமல், அதேவேளை தமிழர் தரப்பின் மன ஆதங்கத்தை-உள உளைச்சலை-விசனத்தை-வெளிப்படுத்துவதும் நமது கடமையாக இருக்கின்றது.

பெரும்பான்மைச் சிங்களவர்களினால்- ஈழத்தமிழர்களின் சம்மதமோ, உடன்பாடோ, இணக்கமோ இன்றி - அவர்கள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டது இந்த ஒற்றையாட்சி அரசமைப்பு. அதன் நெகிழ்ந்து கொடுக்க முடியாத வரையறைக்குள்ளும், இரும்புச் சுவர்களுக்குள்ளும் நின்று கொண்டுதான் இலங்கையின் நீதித்துறை செயற்படுகிறது. செயற்பட முடியும் என்ற யதார்த்தமும் தமிழர்களுக்குப் புரிகின்றது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அண்மைக் காலத்தில் இலங்கை நீதிமன்றங்கள் அவர்கள் சம்பந்தமாக வழங்கிய மூன்று தீர்ப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒன்று- ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக் கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தத்தின் மீது உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

இரண்டாவது-1987இல் விடுவிக்கப்பட்ட உத்தரவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பு செல்லுபடியற்றது என 19 ஆண்டுகளின் பின்னர் கடந்த ஆண்டில் உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு.

கடைசியாக- அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் சட்டவிரோதமானது என அறிவிக்கும்படி கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நிராகரித்து அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

முதல் இரண்டு விடயங்களும் நேரடியாகத் தமிழர்களைப் பாதிக்கும் விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டவை. தீர்ப்புகளும் அவர்களுக்குப் பாதகமாகவே வந்தன.

மூன்றாவது விடயம் முழு நாட்டையுமே- தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என நாட்டின் முழு மக்களையுமே- பாதிக்கும் விவகாரத்துடன் தொடர்புடையது. யுத்தநிறுத்தத்திற்கு வழி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செல்லுபடியற்றது என இலங்கை நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்குமானால்-வழங்கியிருக்குமானால்- அடுத்தகணமே நிலைமை மோசமாகியிருக்கும். ஏற்கனவே தள்ளாடிக்கொண்டிருக்கும் போர்நிறுத்த நிலைமை முறிந்து முழுப்போர் வெடித்திருக்கும். அது தமிழர்களுக்கு மட்டுமல்ல, பெரும்பான்மைச் சிங்களவர்கள், அரசு உட்பட அனைத்துத் தரப்பினருக்குமே மோசமான விளைவுகளையும், பாதிப்புகளையும் தருவதாக அமைந்திருக்கும்.

ஆனால், அந்த விடயத்தில்- பெரும்பான்மையினருக்கும் பாதிப்பு ஏற்படுத்தாத விதத்தில் - 'கடவுள் கிருபையால்'- நீதி நல்லது செய்திருக்கின்றது.

மேலும், அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசியல் கொள்கை முடிவு, அது நீதிமன்ற சட்ட ஆய்வுக்கு (Justiciable) உரியதல்ல என்றும் இலங்கை நீதிமன்றம் தீர்மானித்திருக்கின்றது. அரசியல் தலைமைகள் எடுக்க வேண்டிய கொள்கைச் சித்தாந்தங்களில் நீதிமன்று தீர்மானங்களை எடுப்பது பொருத்தமற்றது என்பது அங்கு வெளிப்படையாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்ற விவகாரமே வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றிய கொள்கை முடிவும். ஆனால் அதில் நீதிமன்று தலையிட்டுத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

போர்நிறுத்தத்துக்கு வழிசெய்த அரசு - புலிகள் ஒப்பந்தமாவது இலங்கை அரசுடன் நேரடியாக ஆயுதப் போரில் ஈடுபட்டிருக்கும் ஒரு தரப்புடன் செய்யப்பட்டது. அரசுத் தரப்பில் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர் பிரதமர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அல்லர்.

ஆனால், வடக்கு - கிழக்கு இணைப்புக்கு வழிசெய்த ஏற்பாடோ இலங்கை நாடு தனது அயல் வல்லாதிக்க நாடான இந்தியாவுடன் - அந்த நாட்டின் அரசுத் தலைவருடன் - செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவானது. அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர் இலங்கையின் பிரதமர் அல்லர். நாடாளுமன்றில் அரசின் தலைவராகவும் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவும் இருந்தவரால் ஒப்பமிடப்பட்டது அந்த உடன்படிக்கை.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டு ஜனாதிபதிகளால், இரண்டு வேறுபட்ட இலக்குகளைக் கொண்ட இருவேறு கட்சிகளின் அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது முடிவுக்குக் காரணமாக தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், வடக்கு - கிழக்கு இணைப்போ அந்த நாட்டில் இதுவரை இருந்த சகல நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளாலும் - ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பி. பிரேமதாஸா, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ என - அனைத்து ஜனாதிபதிகளாலும், அவர்களது காலத்தில் பதவியில் இருந்த ஐந்து, ஆறு அரசுகளாலும், சுமார் 19 வருடங்கள் ஏற்று அங்கீகரிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பை சாத்தியமாக்கும் விடயங்களை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே தீர்மானித்தார். அதற்கு அடிப்படையான அம்சங்களை ஆராய்ந்து அவர் அரசியல் தீர்மானம் எடுத்தார். அரசியல் தீர்மானம் எடுக்கும் அவரது தகைமை இப்போது நீதித்துறையால் கேள்விக்குள்ளாக்கப்பட்டு அந்த முடிவு மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

இதன் பின்னால் புதைந்து கிடக்கும் தாற்பரியத்தை - உண்மையை - புரிந்துகொள்ளமுடியாமல் பரிதவிக்கின்றார்கள் தமிழர்கள்.

சில சமயங்களில் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான விடயத்தில் அதை நடைமுறைப்படுத்தும் செயற்பாடு சட்ட ஒழுங்கு முறைக்கு அமைவாக இடம்பெறவில்லை என்றும், அதனால்தான் இப்படியாயிற்று என்றும் சிலர் வாதிடலாம். அப்படி என்றாலும் கூட, இவ்வாறு 19 வருடங்களாக இருந்து வந்த நிலையை ஒரு கணத்தில் தூக்கி எறிந்து மாற்றும்போது - இத்தகைய சட்ட நடைமுறைத் தவறை அதற்கு முக்கிய அடிப்படைக் காரணமாக முன்னிறுத்தும்போது - அப்படி மாற்றப்படும் செயற்பாட்டால் பாதிக்கப்படும் மக்களுக்குரிய நிவாரணத்துக்கும் தீர்வுக்கும் வழிகாட்டுவதும் நீதித்துறையின் பொறுப்பல்லவா?

தமிழர்களுக்கு எதுவுமே விளங்கவில்லை!

# தபால் பொதிகளை கப்பலில் வடக்கே அனுப்புவது தாமதம் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, மார்ச் 9

அத்தியாவசிய உணவுப் பொருளான கோதுமை மாவை யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் அவசரமாக அனுப்பவேண்டி இருப்பதால் தபால் பொதிகளை அங்குஅனுப்புவதில் தாமதம் ஏற்பட்டிருக்கின்றது.

- இவ்வாறு தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் உள்ள தங்களின் உறவினர்களுக்கு ஏனைய மாவட்டங்களில் இருந்து பொதுமக்களால் தபாலில் அனுப்பப்பட்ட பெருந்தொகை தபால் பொதிகள் கடந்த சில மாதங்களாக திருமலையில் தேங்கிக் கிடக்கின்றன.

தேங்கிக் கிடக்கும் பொதிகள் அனைத்தையும் கப்பல் மூலம் வடக்கே அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டு தனது பணிப்பின் பேரில் அவை அனைத்தும் ஒன்றும் விடாமல் - யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டு விட்டன என்று அமைச்சர் ஹக்கீம் கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார். ஆனால், வடக்கே எந்த தபால் பொதிகளும் இதுவரை திருகோணமலையில் இருந்து கப்பலில் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது பின்னர் தெரியவந்துள்ளது.

இதனால் பொதிகளை அனுப்பியோர் கடும் விசனம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையிலேயே அமைச்சர் ஹக்கீம் நேற்று மீண்டும் இது விடயத்தை நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபித்தார்.

கோதுமை மா கப்பலில் ஏற்றப்படுவதால் தபால் பொதிகளை வடக்கே அனுப்பிவைக்க முடியவில்லை என்று அவர் காரணம் கூறியிருக்கிறார்.

திருகோணமலையில் தேங்கிக்கிடந்த தபால் பொதிகள் அனைத்தும் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று ஹக்கீம் உண்மைக்கு முரணான செய்தியைக்கூறி இந்தச் சபையை பிழையாக வழிநடத்தி விட்டார் என்று நேற்று ஈழவேந்தன் நாடாளுமன்றில் முன்வைத்து குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் முகமாகவே ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட வேண்டிய தபால் பொதிகள் திருகோணமலையில் குவிந்து கிடக்கின்றமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைரட்ணசிங்கமும் ஈழவேந்தனும் என்னிடம் எடுத்துக் கூறினர். அதன்படி நான் செயற்பட்டேன்.

நான் சீனா செல்வதற்கு முன்பே இப்பொதிகளை அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தபால் மா அதிபருக்கு உத்தரவிட்டேன். அவர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் இணைந்து செயற்பட்டார்.

இம்மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு கப்பல் ஒன்று வந்தது. அதில் 6 ஆயிரம் தொன் எடையுள்ள பொருள்களை ஏற்ற முடியும்.

அந்தக் கப்பலில்தான் இப்பொதிகளை ஏற்றி அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்தக்கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதற்காக 5500 தொன் எடை கொண்ட கோதுமை மாவையும் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

முதலில் கோதுமை மாவையும் பிறகு தபால் பொதிகளையும் ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை அனைத்தும் ஏற்றி முடிக்கப்பட்டு கப்பல் புறப்படத் தயாராகிறது என்று திருகோணமலை உபதபால் அதிபர் என்னிடம் கூறினார். அந்தத் தகவலைத் தான் நான் இச் சபையில் கூறியிருந்தேன்.

நடந்தது என்னவென்றால் கோதுமை மா இன்னும் ஏற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. அது ஏற்றி முடிந்ததும்தான் தபால் பொதிகள் ஏற்றப்பட்டு அனுப்பப்படும்.

தபால் பொதிகள் அனுப்பப்படுவதற்கு தாமதமாகுமே தவிர அனுப்பப்படுவது நிச்சயம். நான் பொய் கூறி இந்தச் சபையைப் பிழையாக நடத்த முற்படவில்லை. உண்மை நிலையை உணர்ந்திருந்தும் ஈழவேந்தன் பொய் கூறுகின்றார் - என்றார்.

## முதலாம் தவணைப் பரீட்சை ஒரு வாரத்தில் ஆனால் போதிய பாடநூல்கள் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச், 9

பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சைகள் ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒரு வார காலமே உள்ளது. ஆயினும் குடாநாட்டுப் பாடசாலைகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் இதுவரை கிடைக்கவில்லை என யாழ். கல்வி வலய வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

குடாநாட்டிலுள்ள ஐந்து வலயங்களிலுமுள்ள பாடசாலைகளுக்கு கெனக் கோரப்பட்ட தொகையில் 70 சதவீதமானவற்றுக்குக் குறைவான புத்தகங்களே கிடைத்துள்ளன. சில கல்விக் கோட்டங்களுக்கு கோரப்பட்ட தொகையில் 50சதவீதமே கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பாட நூல்கள் முழுமையாகத் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்குக் கிடைக்காமையால் தமிழ் மாணவர்கள் கல்வியில் பின்னடைவை எதிர் கொள்ளும் அபாயம் உள்ளது என கல்வி வட்டாரம் சுட்டிக்காட்டுகின்றது.

பாடநூல் வெளியீட்டுத் திணைக்களம் மட்டுமன்றி வேறு தனியார் நிறுவனங்களும் பாடநூல்களை அச்சிட்ட போதிலும் குடாநாட்டுக்குத் தேவையானவை இன்னும் அனுப்பப்படாதிருப்பதற்கான சரியான காரணம் எது என்பது குறித்துத் தகவல்கள் இல்லை. (88-202)

## வடக்கே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினர் தடை விதித்துள்ளனர். யாழ். குடாநாட்டுக்கு பத்திரிகை அச்சுத்தாள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?" என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் இது விடயம் நீங்கள் கூறும் வரை எனக்குத் தெரியாது. இது குறித்து தான் விசாரிக்கின் றேன் - என்றார்.

**ஆசிரியர் குறிப்பு -**

1. ஊடக அமைச்சரின் பதில் ஆச்சரியத்தை தருகின்றது.

2. வடக்கே பத்திரிகைத்தாள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாத நிலையை விவரமாக எடுத்துரைத்து, விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி கோரி, தகவல் ஊடக அமைச்சருக்கு அவரது பெயர் மற்றும் பதவி நிலை குறிப்பிட்டு முகவரியிடப்பட்ட - ஆங்கில மொழியில் அமைந்த - 'யாழ்ப் பாணத்துக்கான பத்திரிகைத்தாள் விநியோகம்' என்ற தலைப்பிலான கடிதம் கடந்த 19ஆம் திகதியும் கூட பதிவுத் தபா லில் 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநரால் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டமையை அவருக்கு நினைவு படுத்த விரும்புகின்றோம்.

3. இலங்கையில் ஊடக சுதந்திர நிலை குறித்து ஆராய்வதற்காக கடந்த ஒக்ரோபருக்கும் பின்னர் சர்வதேச ஊடகப்பிரதி நிதிகள் அடங்கிய குழுக்கள் இரண்டு தடவைகள் இலங்கைக்கு வந்தன. அச்சமயங்களில் எல்லாம் தகவல் ஊடக அமைச்சரை அந்த உயர் மட்டக் குழுக்கள் நேரடியாகச் சந்தித்துப் பேசின. அப்போதெல்லாம் அவை வடக்கிற்குப் பத்திரிகைத் தாள் எடுத்துச் செல்லப்பட அனுமதிக்காமல் தடுக்கப்படுவது குறித்து அமைச்சருக்கு நேரடியாகவே எடுத்துரைத்தன என்பதைத் திட்டவட்டமாக உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

அதுமட்டுமல்ல. அவை இந்த விடயம் குறித்து (யாழ். குடாநாட்டுக்குப் பத்திரிகைத் தாளை எடுத்துச் செல்வதற்கான தடை குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும்) எழுத்திலும் அறிக்கை மற்றும் கடிதம் வடிவத்தலும் - தகவல்,ஊடக அமைச்சருக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றன என்பதை அமைச்சருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

இவ்வளவுக்குப் பின்னரும் இவ்விடயம் பற்றி இதுவரை தமக்குத் தெரியாது என அவர் கூறுவது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் வேலையன்றி வேறல்ல.

4. சரி. இதுவரை தான் அவருக்கு இவ் விவரம் தெரியவரவில்லை. இப்போதாவது தெரியவந்துள்ளதல்லவா? ஊடக சுதந்திரம் பற்றி அதிகம் பேசும் அமைச்சர் இவ்விடயத்தில் இனி எவ்வளவு நாள்களில், என்ன நடவடிக்கை எடுக்கிறார் என்பதை அறிவதற்கு குடாநாட்டு வாசகர்களும் ஏனையோரும் காத்திருக்கிறார்கள் என்பதை [illegible] (ஆ-ர்)

## நாளை

மாசி - 26
சனிக்கிழமை
10.03.2007
திதி: சஷ்டி
பிற்பகல் : 04.41
நட்சத்திரம்: விசாகம்
காலை : 08.05
சுபநேரம் : 03.23 - 04.53
ராகுகாலம் : 09.23 - 10.53

## தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளர் கொலை

யாழ்ப்பாணம், மார்ச்9

மல்லாகம் ரயில் நிலைய வீதியில் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் அந்த நிலையத்தின் உரிமையாளர் கொல்லப்பட்டார்.

தொலைத் தொடர்பு நிலையத்தின் உரிமையாளரான கார்த்திகேசு இலங்காபதி (வயது -62) என்பவரே உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

## வல்வை இளைஞரை காணவில்லை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்கவடிவேல் கஜன் (வயது20) என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பட்டப்பின் படிப்பு மீள் பரீட்சை

யாழ். பல்கலைக்கழகப்பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பண்பாட்டியல் முதுகலை மாணிகற்கை நெறிக்குரிய மீள் பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் நடைபெறும். எனவே, பரீட்சார்த்திகளை எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்தார்.

## குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

### ஆலயங்களைப் பதிவுசெய்யவும்

யாழ்ப்பாணம்,மார்ச் 9

குடாநாட்டிலுள்ள இந்து ஆலயங்களைப் பதிவுசெய்யுமாறு இந்து சமயப் பேரவை கேட்டுள்ளது.

கடந்த காலங்களில் வழங்கப்பட்டதுபோன்று ஆலயங்களுக்கு பூசைப்பொருள்கள் தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கருத்திற்கொண்டு இல. 141, பலாலி வீதியில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு ஆலய நிர்வாகிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

பதிவுசெய்யப்பட்ட ஆலயங்களுக்கு மட்டுமே இனிவரும் காலங்களில் பூசைப்பொருள்கள் வழங்கப்படும் என்று இந்துசமயப்பேரவை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-4)

### கப்பல் சேவை இன்று இல்லை; ஞாயிறன்றே

யாழ்ப்பாணம், மார்ச் 9

தெற்குப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்று யாழ் மாவட்ட செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்ட மாணவர்களை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பயண ஏற்பாடுகளுடன் யாழ். ரயில் நிலையப்பகுதிக்கு சமூகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதே வேளை இன்று இடம்பெறவிருந்த கப்பல் சேவை தவிர்க்கமுடியாத காரணத்தால் இடம் பெறமாட்டாது என்றும் அதற்குப் பதிலாக எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-வ)

### தனியார் வர்த்தகர்களுக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், மார்ச்9

காரைநகர் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ள 'ஜெனிகிளிப்பர்' கப்பலில் தனியார் வர்த்தகர்களுக்கு உணவுப் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இக்கப்பலில் 38 மெற்றிக் தொன் பாக்கு மற்றும் உழுந்து, பயறு, கடலை,கோதுமை மா, ஆகியன எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் அறிய வந்தது.

இந்தப் பொருள்கள் இன்று சந்தைக்கு விற்பனைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

### கோழி இறைச்சியும் கப்பல் மூலம்

யாழ்ப்பாணம், மார்ச்9

குடாநாட்டில்கோழி இறைச்சிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து 10 ஆயிரம் கிலோ கோழி இறைச்சியை எடுத்துவர ஏற்பாடாகி வருகின்றது.

திருகோணமலையில் இருந்து அநேகமாக அடுத்தவாரம் கப்பல் மூலம் கோழி இறைச்சி எடுத்து வரப்படும் என்று அறிய வருகின்றது.

குடாநாட்டில் கால்நடை தீவனங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் நுகர்வோர் இறைச்சி வகைகளை பெறமுடியாத சூழல் ஏற்பட்டிருக்கிறது.

அதனையடுத்து 10 ஆயிரம் கிலோ கோழி இறைச்சியை கப்பல் மூலம் எடுத்துவர தனியார் வர்த்தகர் ஒருவர் ஏற்பாடு செய்து வருவதாக அறியப்படுகின்றது.

### கிராமசேவையாளர் பரீட்சை; அச்சுவேலியில் பரீட்சை நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

நாளை நடைபெறவுள்ள கிராம அலுவலர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்காக அச்சுவேலி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் அதே இடத்திலேயே இயங்கும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் மத்திய கல்லூரி என அறிவிக்கப்பட்டமை தவறு என்றும்அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸிலும் நானும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

கடந்த சில தினங்களாக இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வானில் என்னையும்மங்கள சமரவீரவையும் பின் தொடர்கின்றனர். நேற்று நான் நாடாளுமன்றத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது வெள்ளை வானில் சிலர் விரட்டி வந்தனர். பின்னர் மறைந்துவிட்டனர். எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக நான் மனித உரிமை ஆணைக்குவிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் முறைப்பாடு செய்துள்ளேன்.

**என்ன தவறு செய்தேன் நான் ?**

நான் என்ன தவறு செய்தேன்? கிழக்கு மாகாணத்தில் உண்மை நிலையை வெளிப் படுத்தினேன். அவ்வளவே. இராணுவப் பேச்சாளரே உண்மையை ஒப்புக் கொள்கிறார். வாகரைக்குச் சென்ற போது அங்கு 79 வயதான ஒரேயொரு முதியவரை மட்டுமே காணமுடிந்தது என்று அவர் கூறுகிறார். அங்கு எல்லாஇடங்களுமே மனித நடமாட்டம் இல்லாத வனாந்தரமாக் காணப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

''இதைத் தான் நானும் கூறினேன். பிரபாகரன் கிழக்கில் இல்லை. படை எடுப்பது என்றால் முல்லைத்தீவு, கிளிநொச் சிப் பிர தேசங்களுக்குப் படை எடுக்க வேண்டும். கட்டாந்தரையைப் பிடித்துக் கொண்டு தம்பட்டம் அடிக்கவேண்டாம் - என்று கூறினேன்.

**கிளிநொச்சி மீது படையெடுக்கத் தயங்குவது ஏன்?**

இவர்கள் ஏன் கிளிநொச்சி மீது படை எடுக்கத் தயங்குகின்றனர் என்பது எனக்குத்தெரியும்.

எனது அமைச்சுப் பதவி பறிக்கப்பட்ட சில மணி நேரத்தில் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின்பேரில் எனது பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது. எமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக நாம் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ததன் பின்னர் மங்கள சமரவீரவுக்கு எட்டுப் பேரும் எனக்கு நான்கு பேரும் பாதுகாப்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களை நாம் முன்பின் பார்த்ததே இல்லை. இவர்கள் குறித்து எமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே, முன்பு எங்களுடைய பாதுகாப்புக் கடமையில் இருந்தவர்களையே திருப்பித்தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளேன். எனது வீட்டுக்கு காவல் கடமையில் இருந்த இரண்டு பொலிஸ்காரர்களையும் கூட நேற்றுமுதல் வாபஸ் பெற்றுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனது சிறப்புரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். சுதந்திரமாகப் பேசும்எனது அடிப்படை மனித உரிமை காக்கப்பட வேண்டும். இதற்கு சபாநாயகர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார் சிறிபதி சூரியாராச்சி தனது நீண்ட உரையில். (அ-க)

## சிறிபதி.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் இருந்து அண்மையில் அரசுடன் இணைந்துகொண்ட ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரது ஆதரவாளர்கள் சிலரே வாகனம் ஒன்றில் வந்து துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



### திருமதி மகேஸ்வரி குகதாசன் (பபா)

அன்னை மடியில் 31 - 03 - 1936 ஆண்டவன் அடியில் 03 - 02 - 2007

03.02.2007 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி மகேஸ்வரி குகதாசன் (பபா) அளவெட்டியைச் சேர்ந்தவரும், கொழும்பு, மருதனார் மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆவார். அன்னார் மறைந்த செய்தி கேட்டு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும், தொலைபேசி மூலம் எம்முடன் துயர் பகிர்ந்தோர்க்கும் உரிய நேரத்தில் வேண்டிய உதவிகள் புரிந்த அன்புள்ளவர்களுக்கும் மகிந்த மலர்ச்சாலையில் ஆராதனை நிகழ்த்திய தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவண. கலாநிதி டானியல் தியாகராஜா அவர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் 11.03.2007 பம்பலப்பிட்டி அரச தொடர்மாடியில் உள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் (Bambalabitiya flats Community centre) நடைபெறவிருக்கும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையாரை வேண்டுகிறோம்.

50/2 St. Marris Road,
Mountlavinia
011 2725789, 0112725208

பிரிவால் துயருறும்
த.குகதாசன்(கணவர்)
சரோஜினிதேவி தேவராஜ்,
யோகேஸ்வரி ஜெயக்குமார் (சகோதரிகள்).

(அ-52168)

## மரண அறிவித்தல்கள்

### சட்டநாதர் பரமேஸ்வரிஅம்மா

299, நாவலர் வீதி, ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சட்டநாதர் பரமேஸ்வரி அம்மா நேற்று (08.03.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சிதம்பரநாதன் மற்றும் செந்தில்நாதன் (கனடா), தனேஸ்வரி, யோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி(வவுனியா),ஆனந்தேஸ்வரி(கொழும்பு), பரமேஸ்வரநாதன்(பிரதேச சபை, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.03.2007) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

தகவல்:
பரமேஸ்வரநாதன் (மகன்).

### திருமதி இரத்தினராசா சரஸ்வதி



புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினராசா சரஸ்வதி நேற்று (08.03.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - பெரியதங்கச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தேவராஜா(சோபனா ஆடையகம்) மற்றும் செந்தமிழ்ச்செல்வன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் இராஜேஸ்வரி, இராஜாம்பாள்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் லண்டனில் வசிக்கும் காந்தன், சுரேஷன் மற்றும் மதன், சுதன், சுவிசன்,சோபனா, லக்சனா கனடாவில் வசிக்கும் தர்ஷிகா, அஜந்திகா,கிரிஷாந்த், கிரிஷாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கரீஷின் (லண்டன்) அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 96, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(56697)

தகவல்
குடும்பத்தினர்.

## ஈராக்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக்க ஒரு விடயம் - என்றும் விமல் வீர வன்ஸ தெரிவித்தார். சபாநாயகரின் அனுமதியுடன் சபையில் கவன ஈர்ப்பு பிரேரணை ஒன்றை முன்வைத்துப் பேசும்போதே விமல் வீரவன்ஸ இப்படிக் கூறினார்.

அவர் சபையில் மேலும் கூறியதாவது:-

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸின் பிரதிநிதியாக ஸ்டீவன் மான் இங்கு வரவுள்ளார். அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜனாதிபதி பஷ்ஷுக்கு கொடுத்த அழுத்தத்தின்காரணமாகவே உதவி ராஜாங்க செயலாளரான ஸ்டீவன் மான் இங்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்.

அவர்இங்குதங்கி இருக்கும்காலத்தில் இலங்கையில்இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்டு ஆய்வுகளை நடத்துவார் என ஊடகங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இங்கு நாம் ஒரு விடயத்தை அவதானிக்க வேண்டும். அதாவது அமெரிக்காவில் பயங் கரவாதத்தை ஒழிப்பதற்காக புஷ் அரசு மேற்கொண்டு வரும் கெடுபிடிகளும் '' தேசப்பற்று சட்டம்'' என்ற பெயரில் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்கு முறைகளும் பாரியமனித உரிமை மீறல்கள் என அந்நாட்டு புத்திஜீவிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கர் ஒரு நாட்டிற்குள் காலடி வைக்கும் போது அந்நாட்டு அரசாங்கத்தை தமது கைப்பொம்மைகளாக்கிக்கொள்ள முயற்சிப்பார்கள். அந்த நோக்கம் நிறைவேறாவிட்டால் அந்நாட்டு மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டிவிட்டு தமது நோக் கத்தை நிறைவு செய்து கொள்வார்கள்.

கிழக்கு தீமோர், சூடான் ஆகிய நாடுகளில் பிரிவினையை ஏற்படுத்திக்கொடுத்தவர்களே அமெரிக்கர்கள்தான். இதனை நாம் முன் உதாரணமாகக் கொள்ளவேண்டும்.

நாம் பிரிவினைவாத ஆக்கிரமிப்பாளர்களின் கைப்பொம்மைகளாகிவிடக்கூடாது. நாட்டின் இறைமையும் சுதந்திரமும் பாதுகாக்கப்படவேண்டும் ஒருமைப்பாட்டை சிதைக்க எந்தஒரு வெளிநாட்டு சக்திக்கும் இடமளிக்கக்கூடாது.

ஒரு போதும் பயங்கரவாதத்தை வளர்த்துவிட்டுமனித உரிமைகளைப் பாதுகாக்கவே முடியாது- என்றார். (ஐ)

## செங்கலடியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு கறுத்தப் பாலத்திற்கு அருகில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது எனப் பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை 5.30 மணியளவில் இடம் பெற்ற இந்தத் துப்பாக்கிச் சண்டையில் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் விடுதலைப்புலிகளுக்கு சேதம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் ஊடக நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-வ)

## தொப்பிகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியவாறு ஆயிரக் கணக்கான அரசுத் துருப்புகள் தொப்பிகல காட்டில் உள்ள புலிகளின் தளங்களை நோக்கி முன்னேறத் தொடங்கியுள்ளன என்று இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி அந்த வெளிநாட்டு செய்திச் சேவை தெரிவித்தது. (ஐ)

## அரசியல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரவாத நடவடிக்கைகளையும் ஒழிப்பதற் காகவே ஐக்கிய தேசியக்கட்சி அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு ஆதரவு வழங்கியுள்ளது. ஆனால், இன்றைய நிலையில் அதனை மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால், இன்று நடைபெறுவது என்ன? அன்றாடம் ஆள்கடத்தல்கள், படுகொலைகள், கப்பம்கோருதல், வல்லுறவுகள், கொள்ளைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவே அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இவற்றை தடுக்க முடியாத நிலையில் அவசரகாலச்சட்டம் அவசியம் தானா என்று சிந்திக்க வைத்துள்ளது.

முத்து ராஜவெலயில் ஐந்து சடலங்களும், அனுராதபுரத்தில் ஐந்து சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன. அவற்றையும் பொதுமக்களே கண்டுபிடித்து தகவல் கொடுத்துள்ளனர். பொலிஸாரோ அல்லது பாதுகாப்புக் குழுவினரோ கண்டு பிடிக்கவில்லை.


### விற்பனைக்கு

1200 பழைய ஓடுகள் (கழுவியது) விற்பனைக்குண்டு.

தொடர்பு: வ.நடராசா,
தேன்மலர், தில்லைகட்டி, சுன்னாகம்.

### கார் விற்பனைக்கு

HY-XXXX தொடரிலக்க NISAN (BLUE BIRO) கார் விற்பனைக்குண்டு.
0773866250, 0777563781


### தவறிவிட்டது

சுப்பிரமணியம் சுகிதா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல 785123468V), விஷேட அடையாள அட்டை ஆகியன நேற்று முன்தினம் (07.03.2007) ஆஸ்பத்திரி வீதிக்கும் இராசாவின் தோட்டத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல 16, இராசாவின் தோட்டம் லேன், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அல்லது 0777283 600 / 0776 016263/222 2216 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் ஸ்ரீதரனின் தந்தை

**கார்த்திகேசு இலங்காபதி**

அவர்கள் நேற்று(08.03.2007) வியாழக் கிழமை மல்லாகத்தில் அகாலமரண மடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது பிரிவால் வாடும் குடும்பத்தினரது துயரிலும் பங்குகொள்கின்றோம்.

நண்பர்கள், [illegible].

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு இலங்காபதி



**(பிரபல வர்த்தகர், மல்லாகம்)**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கார்த்திகேசு இலங்காபதி நேற்று (08.03.2007) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சத்தியவதி, அமரர் புனிதவதி, நல்லகுணவதி, தர்மகுணவதி, அம்பிகாவதி ஆகியோரின் சகோதரனும் ஸ்ரீலதா, ஸ்ரீதரன் (உதவிப் பணிப்பாளர், மத்தியவங்கி, கொழும்பு), ஸ்ரீரஜனி (கணக்காளர் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இளநகை (அபிவிருத்தி உதவியாளர், சமூக சேவைகள் அமைச்சு - கொழும்பு), பிரஷாந்தன்(ஆசிரியர், யா/மத் திய கல்லூரி) ஆகியோரின் மாமனும் மானஷி, மகிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். றோட்,
மல்லாகம்.

தகவல்:
ஸ்ரீதரன் (மகன்).

### சிதம்பரப்பிள்ளை செல்லம்மா



**(சாவகச்சேரி - மீசாலை)**

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை செல்லம்மா 07.03.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் திருச்செல்வம், மனோரஞ்சிதம், புஷ்பராசமணி (ஆசிரியை, யா/கட்டுவன் புலம் ம.வி.), அருட்செல்வம், செல்வராணி (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம்), நிர்மலாதேவி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயராசா, ஆனந்தராசா, செல்வமலர், ஜெகதீசன், பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியும் மகேஸ்வரி, சரவணமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌசல்யா, ராசா, நிரோன், றோசி, நிக்சன், சுஜீவ்ன், மாயவரன், சிந்துஜன், யானுசன், வக்ஷன், யாமினி, ஜெனனிதா, கஜீவன், பானுஜன் ஆகியோரின் அம்மம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2007) வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொற்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோலையம்மன் கோயில் வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.
தொ.பே: 0777495965

(58688)

தகவல்:
பிள்ளைகள்.

### தம்பித்துரை நாகரத்தினம்



கோணாந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை நாகரத்தினம் நேற்று (08.03.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கச்சியம்மா (நாகம்மா) தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மனைவியும் சரஸ்வதியின் அன்புச் சகோதரியும் விநாயகமூர்த்தி (பரஞ்சோதி, இந்தியா), காலஞ்சென்ற மோகன் ஆகியோரின் அன்புத் தாயும் உமாதேவியின் மாமியும் பிரதீபா - குமணன், பிரசன்னா (லண்டன்), பிரசாத், பிரவீனா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, இராசையா, சரவணமுத்து, கனகலிங்கம், வீரசிங்கம் மற்றும் பூபாலு, தர்மலிங்கம், இந்திரா (இந்தியா), மனோன்மணி, நித்தியலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அன்னம்மா, புவனேஸ்வரி, இராசேஸ்வரி மற்றும் கமலாம்பிகை, அன்னலக்சுமி, காலஞ்சென்ற நவரட்ணம், தனபாலசிங்கம் (குணம்), காலஞ்சென்ற சத்தியசீலன் ஆகியோரின் மைத்துனியும் பற்குணம், நடராசா, சிவசக்தி ஆகியோரின் பெரியதாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.03.2007) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

141/4, கே.கே.எஸ் வீதி,
கோணாந்தோட்டம், யாழ்ப்பாணம்.

(58689)

தகவல்:
த.சரஸ்வதி.

### சின்னத்துரை சிவசுதன்



**(ஆசிரியர், வரணி மகா வித்தியாலயம்)**

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், நந்தாவில் லேனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவசுதன் நேற்று (08.03.2007) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதர் சின்னத்துரை(கிராம சேவையாளர்) மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மகனும் சுமதி(ஜேர்மனி), கௌரீசன் (ஆசிரியர் திருமுருகண்டி மகாவித்தியாலயம், கிளிநொச்சி), சுகந்தினி(நோர்வே), சிவபரன்(பிரான்ஸ்), சிவகரன்(ஜேர்மனி), சுதர்சினி (இராமநாதன் நுண்கலைப் பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மபாதன்(ஜேர்மனி), தீபா(பிரதேச செயலகம், பளை), மணிவண்ணன்(நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(58694)

தகவல்:
சி.கௌரீசன் (சகோதரர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.